## மேலும் ஆரோக்கியமான SG நாட்பட்ட நோய்ப் பிரிவுடன் கூடுதல் மானியங்கள் பெறலாம்

| வருகைக்கான கட்டணம் | மேலும் ஆரோக்கியமான SG திட்டத்தில் இல்லாத மருந்தகத்தின் CHAS நாட்பட்ட நோய்ப் பிரிவு | மேலும் ஆரோக்கியமான SG திட்டத்தில் இடம்பெறும் மருந்தகத்தின் மேலும் ஆரோக்கியமான SG நாட்பட்ட நோய்ப் பிரிவு |
|---|---|---|
| மருத்துவ ஆலோசனையும் பரிசோதனையும் | $80.00 | |
| மற்ற மருந்துகள் | $40.00 | |
| பொதுவான நாட்பட்ட நோய் மருந்துகள் | $80.00* | |
| மானியங்கள் | - $125.00 (ஒவ்வொரு வருகைக்கும் CHAS நீல அட்டைக்கான வரம்பு) | - $180.00† |
| செலுத்த வேண்டிய நிகரக் கட்டணம் | $75.00 | $20.00 மேலும் ஆரோக்கியமான SG மானியங்களுடன், செலுத்த வேண்டிய நிகரக் கட்டணம் குறைவு! |
| மெடிசேவ் சேமிப்பிலிருந்து செலுத்தப்படுவது | $63.75 | $20.00‡ |
| கைக்காசு | $11.25 | கைக்காசு இல்லை $0.00 |



### திருவாட்டி சாந்தி

- மானியங்கள் இல்லாமல் ஆரம்பக் கட்டணம் $200
- CHAS நீல அட்டைதாரர்
- சிக்கலான நாட்பட்ட நோய்கள் உள்ளவர்*

*சிக்கலானது என்பது பற்பல நாட்பட்ட நோய்களுக்காக, அல்லது பல்வேறு சிக்கல்கள் உள்ள ஒரே ஒரு நாட்பட்ட நோய்க்காக வருகையளிப்பதைக் குறிக்கிறது.

உவமை நோக்கங்களுக்காக மட்டுமே. உண்மையான ஆலோசனை கட்டணங்கள் வேறுபடலாம்

*மேலும் ஆரோக்கியமான SG நாட்பட்ட நோய்ப் பிரிவின்கீழ் கோரிக்கை செய்யும்போது, பொதுவான நாட்பட்ட நோய் மருந்துகளுக்கு விழுக்காடு அடிப்படையில் மானியங்கள் வழங்கப்படும். இது CHAS பிரிவுகளுக்கு ஏற்ப மாறுபடும்.

†மானியக் கணக்கீடு: தேர்ந்தெடுக்கப்படாத மருந்துகளுக்கு $120 (சிக்கலான நாட்பட்ட நோய்கள் உள்ள CHAS நீல அட்டைதாரர்களுக்கு அதிகபட்சம் $125) மற்றும் பொதுவான நாட்பட்ட நோய் மருந்துகளுக்கு $60. மொத்த மானியம்: $180

‡வருடாந்தர மெடிசேவ் பணமெடுப்பு வரம்புகளுக்கு உட்பட்டது



### மேலும் ஆரோக்கியமான SG நாட்பட்ட நோய்ப் பிரிவுடன் பெரும்பாலும் யார் நன்மை அடைவார்கள்?

- ✓ நாட்பட்ட நோய்க்கு அதிகமான மருந்துகள் தேவைப்படுவதால் தற்போதைய CHAS திட்டத்தின் வருடாந்தர மானிய வரம்புகளைவிட அதிகக் கட்டணம் செலுத்தும் நோயாளிகள் பெரும்பாலும் நன்மை அடைவார்கள். மருந்துகள் குறைவாகத் தேவைப்படும் நோயாளிகள், தற்போதைய CHAS மானியங்களைத் தொடர்ந்து பயன்படுத்திக் கொள்ளலாம்.
- ✓ நீங்கள் மேலும் ஆரோக்கியமான SG நாட்பட்ட நோய்ப் பிரிவின்கீழ் பொதுவான நாட்பட்ட நோய் மருந்துகளுக்கு மாறப் பொருத்தமானவரா என்பதைத் தெரிந்துகொள்ள, உங்கள் மருத்துவரிடம் ஆலோசனை கேளுங்கள்.

**பொதுவான நாட்பட்ட நோய் மருந்துகளின் முழுப் பட்டியலை 2 ஜனவரி 2024 தேதியிலிருந்து மேலும் ஆரோக்கியமான SG இணையத்தளத்தில் காணலாம்.**

**காத்திருக்காதீர்கள்! மேலும் ஆரோக்கியமான SG நாட்பட்ட நோய்ப் பிரிவின் மானியங்களைப் பெற, இன்றே CHAS திட்டத்திற்குப் பதிவு செய்யுங்கள்.**

## உங்களது மேலும் ஆரோக்கியமான SG பயணத்தை இன்றே தொடங்க 3 எளிய படிநிலைகள்!



### படிநிலை 1

#### பதிவு

- சுகாதார அமைச்சிடமிருந்து குறுந்தகவல்வழி அழைப்பு கிடைத்தவுடன் மேலும் ஆரோக்கியமான SG திட்டத்திற்குப் பதிவு செய்யுங்கள்
- உங்களுக்கு சுகாதார அமைச்சிடமிருந்து குறுந்தகவல் கிடைக்காவிட்டால், https://go.gov.sg/healthiersg-sms-invite இணையத்தளத்தின்வழி குறுந்தகவலுக்குக் கோரிக்கை செய்யுங்கள்
- HealthHub செயலியைப் பதிவிறக்கம் செய்யுங்கள்

Download on the App Store

GET IT ON Google Play

- நீங்கள் விருப்பப்படும் மேலும் ஆரோக்கியமான SG மருந்தகத்தைத் தேர்ந்தெடுங்கள்




### படிநிலை 2

#### உங்கள் மருத்துவருடன் சந்திப்பு

- உங்களது முதல் சுகாதாரத் திட்ட ஆலோசனைக்குத் தேதி குறித்திடுங்கள். இதற்கு முழு மானியம் வழங்கப்படும்
- உங்கள் குடும்ப மருத்துவருடன் உங்களுக்கான சுகாதாரத் திட்டத்தைத் தயாரித்திடுங்கள்



Download on the App Store

GET IT ON Google Play

### படிநிலை 3

#### பங்கேற்பு

- உங்களுக்கான சுகாதாரத் திட்டத்தைப் பின்பற்றுங்கள்
- Healthy 365 செயலியில் உள்ள நடவடிக்கைகளில் பங்குபெறுங்கள்
- ஓர் ஆண்டில் குறைந்தது ஒரு முறையாவது உங்களது குடும்ப மருத்துவரிடம் தொடர் கவனிப்பு பெறுங்கள்

உதவித் தொலைபேசி சேவை: 6325 9220
www.moh.gov.sg/feedback

www.healthiersg.gov.sg

அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்: https://ask.gov.sg/healthiersg

முன்னெடுத்துச் செல்வோர்
MINISTRY OF HEALTH SINGAPORE

# மேம்பட்ட நன்மைகளுடன்

## உங்களை ஆரோக்கியமாக்கிக் கொள்ளுங்கள்



## ஆரோக்கியமான SG நாட்பட்ட நோய்ப் பிரிவுடன்

| CHAS அட்டைகள் | நாட்பட்ட நோய் நிர்வாகத் திட்டத்தின் (CDMP) நாட்பட்ட நோய்கள் உள்ள நோயாளிகளுக்கு | | |
|---|---|---|---|
| | எல்லா சேவைகளுக்கும்[1] மருந்துகளுக்கும் மானியம் கிடைக்கும்[2] | | பொதுவான நாட்பட்ட நோய் மருந்துகளுக்கு மானியம்[3] கிடைக்கும் |
| | சிக்கலற்றது[4] | சிக்கலானது[4] | சிக்கலற்றது அல்லது சிக்கலானது[4] |
| CHAS பச்சை | ஒவ்வொரு வருகைக்கும் $28 வரையிலான மானியம், அதிகபட்சமாக ஆண்டுக்கு $80 | ஒவ்வொரு வருகைக்கும் $40 வரையிலான மானியம், அதிகபட்சமாக ஆண்டுக்கு $110 | 50% மானியம், வெள்ளி வரம்பு கிடையாது |
| CHAS ஆரஞ்சு | ஒவ்வொரு வருகைக்கும் $50 வரையிலான மானியம், அதிகபட்சமாக ஆண்டுக்கு $130 | ஒவ்வொரு வருகைக்கும் $80 வரையிலான மானியம், அதிகபட்சமாக ஆண்டுக்கு $210 | 75% மானியம், வெள்ளி வரம்பு கிடையாது |
| CHAS நீலம் | ஒவ்வொரு வருகைக்கும் $80 வரையிலான மானியம், அதிகபட்சமாக ஆண்டுக்கு $210 | ஒவ்வொரு வருகைக்கும் $125 வரையிலான மானியம், அதிகபட்சமாக ஆண்டுக்கு $330 | 75% மானியம், வெள்ளி வரம்பு கிடையாது |
| மெர்டேக்கா தலைமுறை | ஒவ்வொரு வருகைக்கும் $85 வரையிலான மானியம், அதிகபட்சமாக ஆண்டுக்கு $230 | ஒவ்வொரு வருகைக்கும் $130 வரையிலான மானியம், அதிகபட்சமாக ஆண்டுக்கு $350 | 81.25% மானியம், வெள்ளி வரம்பு கிடையாது |
| முன்னோடித் தலைமுறை | ஒவ்வொரு வருகைக்கும் $90 வரையிலான மானியம், அதிகபட்சமாக ஆண்டுக்கு $240 | ஒவ்வொரு வருகைக்கும் $135 வரையிலான மானியம், அதிகபட்சமாக ஆண்டுக்கு $360 | 87.5% மானியம், வெள்ளி வரம்பு கிடையாது |

[1] சேவைகள் என்பது மேலும் ஆரோக்கியமான SG தனியார் மருந்தகத்தில் வழங்கப்படும் மருத்துவ ஆலோசனை, பரிசோதனைகள் (எ.கா. இரத்தப் பரிசோதனை) போன்ற சுகாதாரப் பராமரிப்புச் சேவைகளைக் குறிக்கிறது.

[2] மேலும் ஆரோக்கியமான SG ஏற்புப்பட்டியலில், நாட்பட்ட நோய் நிர்வாகத் திட்டத்தின் நாட்பட்ட நோய்களுக்குப் பலதுறை மருந்தகங்களில் பயன்படுத்தப்படும் பொதுவான மருந்துகள் உள்ளடங்கியிருக்கும்.

[3] மேலும் ஆரோக்கியமான SG ஏற்புப்பட்டியலில் உள்ள வழக்கமான மருந்துகளுக்குப் பொருந்தும். மேலும் ஆரோக்கியமான SG ஏற்புப்பட்டியல் மருந்துகளுக்கான உதவி நிதியின் மானிய அளவுகள் பிற்பாடு அறிவிக்கப்படும்.

[4] "சிக்கலற்றது" என்பது ஒரே ஒரு நாட்பட்ட நோய்க்காக வருகையளிப்பதைக் குறிக்கிறது. "சிக்கலானது" என்பது பற்பல நாட்பட்ட நோய்களுக்காக, அல்லது பல்வேறு சிக்கல்கள் உள்ள ஒரே ஒரு நாட்பட்ட நோய்க்காக வருகையளிப்பதைக் குறிக்கிறது.

## அட்டைதாரர்கள் பின்வரும் இரண்டுக்கும் உதவி பெறுவார்கள்:

பொதுவான நாட்பட்ட நோய் மருந்துகளுக்கு, அட்டையின் அடிப்படையில் வெள்ளி வரம்பு எதுவுமின்றி, 87.5% வரை மானியம் பெறலாம்.

மற்ற சேவைகளுக்கும் (எ.கா. மருத்துவ ஆலோசனை, பரிசோதனைகள்) மருந்துகளுக்கும், ஒரு வருகைக்கு $135 வரையிலும் ஆண்டுக்கு $360 வரையிலும் மானியம் பெறலாம்.

ஒவ்வொரு வருகையின்போதும், CHAS / மெர்டேக்கா தலைமுறை / முன்னோடித் தலைமுறை அட்டை வைத்திருப்போர் தற்போதைய CHAS நாட்பட்ட நோய்ப் பிரிவின்கீழ் அல்லது புதிய மேலும் ஆரோக்கியமான SG நாட்பட்ட நோய்ப் பிரிவின்கீழ் மானியங்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

# மேலும் ஆரோக்கியமான SG திட்டம் 5 முக்கிய வழிகளில் உங்களுக்கு உதவி செய்கிறது:

## 1 பரிசோதனைகளும் தடுப்பூசிகளும்

உங்கள் வயது, உடல்நலன், தடுப்பூசி வரலாறு ஆகியவற்றின் அடிப்படையில், சிங்கப்பூர்க் குடிமக்களுக்கு முழு மானியத்துடன் வழங்கப்படும் தேசிய நிலையில் பரிந்துரைக்கப்படும் பரிசோதனைகள், சளிக்காய்ச்சல் தடுப்பூசி போன்ற தடுப்பூசிகள் ஆகியவற்றைப் பெற்று நன்மை அடையலாம்.

ஆரம்பக் கட்டத்திலேயே கண்டுபிடித்து சிகிச்சை அளித்தால், நீரிழிவு நோய், உயர் இரத்த அழுத்தம், இரத்தக்கொழுப்பு, மலக்குடல் புற்றுநோய், மார்பகப் புற்றுநோய், கருக்குழாய்வாய்ப் புற்றுநோய் போன்ற நாட்பட்ட நோய்களும் புற்றுநோய்களும் வராமல் தடுப்பதற்கு அல்லது தாமதப்படுத்துவதற்கு உதவியாக இருக்கும்.

go.gov.sg/rec-screenings-list

go.gov.sg/rec-vaccines-list



## 2 மானியமுள்ள நிபுணத்துவ மருத்துவப் பராமரிப்பு

CHAS, மெர்டேக்கா தலைமுறை, முன்னோடித் தலைமுறை அட்டை வைத்திருப்போர், பொது மருத்துவமனைகளின் நிபுணத்துவ வெளிநோயாளி மருந்தகங்களில் சிகிச்சை பெற மேலும் ஆரோக்கியமான SG மருந்தகங்களில் பரிந்துரைப்புகள் பெறலாம். பரிந்துரைப்புக்காகப் பலதுறை மருந்தகங்களுக்குச் செல்லவேண்டிய அவசியமின்றி, கட்டுப்படியாகும் கட்டணத்தில் நிபுணத்துவப் பராமரிப்பு பெறலாம்.

## 3 சுகாதாரத் திட்டத்திற்குத் தொடர் கவனிப்பு

நீங்கள் பதிவு செய்யும் மேலும் ஆரோக்கியமான SG மருந்தகத்திற்கு முதல்முறை வருகை அளிக்கும்போது, முழு மானியத்துடன் சுகாதாரத் திட்ட ஆலோசனை பெற்று, உங்களது ஆரோக்கியப் பயணத்தைத் தொடங்கலாம். அதன்பின், ஒவ்வோர் ஆண்டும் தொலைபேசிவழி அல்லது மற்ற மருத்துவச் சந்திப்புகளின்போது, இலவச மருத்துவப் பரிசீலனை பெற்று, நீங்கள் நல்ல முன்னேற்றம் அடைவதை உறுதி செய்துகொள்ளலாம்.*

*மேலும் ஆரோக்கியமான SG திட்டத்திற்கு அப்பாற்பட்ட சேவைகளுக்கு நடப்பிலுள்ள கட்டணங்கள் விதிக்கப்படும்.

## 4 கைக்காசு

2024 தொடக்கத்திலிருந்து, நாட்பட்ட நோய் நிர்வாகத் திட்டத்தின்கீழ் நாட்பட்ட நோய்களுக்கு சிகிச்சை பெறும்போது, கைக்காசு இல்லாமல், மெடிசேவ் பணமெடுப்பு வரம்பு வரை, கட்டணம் முழுவதையும் மெடிசேவ் பயன்படுத்தி செலுத்தலாம்.

## 5 பொதுவான நாட்பட்ட நோய் மருந்துகளுக்கு மானியங்கள்

2024 தொடக்கத்திலிருந்து, நாட்பட்ட நோய்க்கு அதிகமான மருந்துகள் தேவைப்படும் CHAS / முன்னோடித் தலைமுறை / மெர்டேக்கா தலைமுறை அட்டைதாரர்கள், தாங்கள் பதிவு செய்திருக்கும் மேலும் ஆரோக்கியமான SG தனியார் மருந்தகங்களில், புதிய மேலும் ஆரோக்கியமான SG நாட்பட்ட நோய்ப் பிரிவின்கீழ் கூடுதல் மானியம் பெறுவார்கள்.